வ..மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல. 32/2026

எனது இல : NP/07/10/01/239
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
13.10.2026

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

வடக்கு மாகாண பொதுச்சேவையின் நூலகர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2026

வடக்கு மாகாண நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் NP/05/01/Lib/Ltd/App/2026 இலக்க 2026.07.14ம் திகதிய கோரிக்கை, அதன்பொருட்டு வடக்கு மாகாண பிரதம செயலாளரினது NP/17/Cad/04/19 vol-II இலக்க 2026.08.09ம் திகதிய சிபார்சு ஆகியவற்றுக்கு அமைவாக, வடக்கு மாகாண பொதுச்சேவையின் நூலகர் தரம் III பதவிக்கு காணப்படும் **பதின்மூன்று (13)** வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது, வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் 2026ம் ஆண்டு நவம்பர் மாதமளவில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2026.10.30** ஆகும்.

02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :

02.1 2013.01.01ம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மாகாண நூலகர் சேவைக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் ஆகியவற்றிற்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ம் இலக்க 2013.07.03ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை மற்றும் இப்பதவியுடன் தொடர்புபட்டு, காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் விதிகள், கட்டளைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த **நூலகர் பதவியின்** தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

02.2 இப்பரீட்சையில் சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதில் கடமைக்கு உட்படுத்தப்பட்டு **நூலகர் தரம் III** பதவியில் உறுதிப்படுத்தப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு நூலகர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று (03)** வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் **வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.**

02.4 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும், நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03)** வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.5 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை **பதின்மூன்று (13)** ஆகும். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

03. சம்பள அளவுத்திட்டம் :

2025.03.25ம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 - 2025**க்கு ஏற்ப நூலகர் தரம் - III பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டமானது **ரூபா. 52,250 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 - 100,040/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

04. தகைமைகள் :

04.1 கல்வித் தகைமைகள் :

க.பொ.த (சா/த) பரீட்சையில் **மொழி** (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்) மற்றும் **கணிதம்** ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக, ஆறு (06) பாடங்களில் **இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவகையில்** சித்தியடைந்திருப்பதுடன், அவற்றில் ஆகக்குறைந்தது ஏதேனும் **இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்திகளை (Credit Pass)** பெற்றிருத்தல் வேண்டும்.

04.2 தொழில்சார் தகைமைகள் :

04.2.1 உயர் கல்வி அமைச்சு அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், மூன்று வருட கால நூலக விஞ்ஞான டிப்ளோமா பாடநெறியின் முதல் வருடத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

04.2.2 இலங்கை நூலக சங்கத்தின், மூன்று வருட கால நூலக விஞ்ஞான டிப்ளோமா பாட நெறியின் முதல் வருடத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

04.3 அனுபவம் :

04.3.1 பொதுச் சேவையின் திணைக்கள ரீதியான ஆரம்ப மட்ட தேர்ச்சியற்ற (PL 1) சேவை வகுதியைச் சேர்ந்த **நூலக உதவியாளர் அல்லது நூலகப் பரிசாரகர்** பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், அப் பதவியில் **10 ஆண்டு கால** முனைப்புடனான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

04.3.2 மேலே பந்தி **04.2.1 மற்றும் 04.2.2** இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா பாட நெறிகளுள் குறைந்தபட்சம் ஒன்றையேனும் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருப்பின், அத்தகைய விண்ணப்பதாரர்கள் திணைக்கள ரீதியான ஆரம்ப மட்ட தேர்ச்சியற்ற (PL 1) சேவை வகுதியைச் சேர்ந்த **நூலக உதவியாளர் அல்லது நூலகப் பரிசாரகர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன்,** இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான 05 ஆண்டுகால முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் போதுமானது.

04.4 வயது : வயதெல்லை ஏற்புடையதல்ல.

குறிப்பு :-

(அ) ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்குரிய நிபந்தனையான பயிற்சி கால எல்லையானது மேற்படி பந்தி 04.3.1 மற்றும் 04.3.2 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான பத்தாண்டு, ஐந்தாண்டு காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்பட மாட்டாது.

(ஆ) ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் தற்காலிக / அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி பந்தி 04.3.1 மற்றும் 04.3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான பத்தாண்டு (10), ஐந்தாண்டு (05) காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்பட மாட்டாது.

05. ஆட்சேர்ப்பு முறை :

05.1 இவ்விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கோரப்பட்டுள்ள **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் முன்னறிவித்தல் எவையுமின்றி நிராகரிக்கப்படும்.

05.2 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் நூலகர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட சகல தகைமைகள், ஆவணங்கள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. இந் நேர்முகப் பரீட்சையின்போது தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

05.3 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர்வரிசை ஒழுங்கில் நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

06. பரீட்சைக் கட்டணம் :

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் **ரூபா. 500/-** ஐ வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகமொன்றிலும் காசுக்கட்டளையாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

07. விண்ணப்பிக்கும் முறை :-

07.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

07.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/239"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

07.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

07.4 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

07.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர்,**

யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: 021 221 9939 / தொலைநகல் இல: 021 221 9940 / மின்னஞ்சல்: **examppscnp@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

08. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :

08.1 பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

08.2 மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

09. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

10. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

11. பரீட்சைத் திட்டம் :

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான மூன்று வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழி மூலத்தை தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் அந்த மொழி மூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

இல	வினாத்தாள்	நேரம்	மொத்தப் புள்ளிகள்	சித்திப் புள்ளிகள்
01.	நூலக விஞ்ஞானம்	03 மணித்தியாலம்	100	40
02.	நுண்ணறிவுப் பரீட்சை	01 மணித்தியாலம்	100	40
03.	பொது அறிவு	01 மணித்தியாலம்	100	40

(பாடவிதானம் : பின்னிணைப்பு - I இல் காட்டப்பட்டுள்ளது.)

குறிப்பு :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் **நாற்பது வீதத்தை (40%)** பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் :

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றையும் **www.np.gov.lk → Exams & Recruitments → Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

கவனிக்கவும் :-

(i) இச் சுற்றறிக்கை மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இச் சுற்றறிக்கையில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை **www.np.gov.lk → Exams and Recruitments → Advertisement → 2026** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

(vi) இச்சுற்றறிக்கை பற்றி தங்களது அமைச்சு/திணைக்களம்/அலுவலகங்களின் கீழ் கடமையாற்றும் தகைமையுள்ள தொடர்புடைய சகல உத்தியோகத்தர்களின் கவனத்திற்கும் கொண்டு வரவும்.

ஆழ்வாப்பிள்ளை சிறி,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு.
வடக்கு மாகாணம்.
2026.10.13

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

இல.	வினாத்தாள்	பாடவிதானம்
01.	நூலக விஞ்ஞானம்	**(1) நூலகங்கள் மற்றும் நூலகத்தொழில்முறை** (அ) நூலகங்கள் மற்றும் நூலகங்களின் வரலாறு. (ஆ) வாசகர் சேவைகள். (இ) நூல்கள், பல்வேறு ஆவணங்கள் மற்றும் அச்சிடப்படாத ஊடகங்களின் தோற்றமும் வளர்ச்சியும். (ஈ) தொழில்முறை அமைப்புக்கள். (i) இலங்கை நூலக சங்கம். (ii) அமெரிக்க நூலக சங்கம் மற்றும் பிரித்தானிய நூலக சங்கம். (உ) நூலகங்களின் வகைகள். (i) பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களிலுள்ள நூலகங்கள். (i) அமைச்சுகள் மற்றும் அரசுத் துறைகளிலுள்ள நூலகங்கள். (ii) பொது நூலகங்கள். (iii) உள்ளூராட்சி அதிகாரசபையிலுள்ள நூலகங்கள். (ஊ) நூலகக்குழுக்கள். (எ) பாதுகாப்பும் பராமரிப்பும். **(2) தகவல் அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும்.** (அ) நூல்களின் வகைப்பாடு, அதன் நோக்கங்கள் மற்றும் பயன்கள். (ஆ) நூல்களை வகைப்படுத்தும் அடிப்படை விதிகள். (இ) தூயி தசம பகுப்பாக்கம் (Dewey Decimal Classification). (ஈ) பட்டியலிடல் மற்றும் அதன் நோக்கங்கள். (உ) ஆங்கிலோ - அமெரிக்க பட்டியலிடல் விதிகள் - 2 (Anglo American Cataloguing Rules - 2). (ஊ) பதிவுகள் மற்றும் நூல் விவரணம். (எ) பட்டியல்களின் வகைகள். **(3) நூலக வளங்கள் மற்றும் தகவல் சேவைகள்.** (அ) பல்வேறு நூலக வளங்கள். (ஆ) நூலக வளங்களைத் தெரிவு செய்தலும் தெரிவு செய்யும் செயற்பாடும். (இ) சேகரித்தல் மற்றும் சேகரிப்பு செயல்முறை. (ஈ) செயலாக்கம். (உ) இருப்பு மீளாய்வும் அகற்றுதல் செயற்பாடும். **(4) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்** (அ) நூலக சேவைகளில் தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கம்.

02.	நுண்ணறிவுப் பரீட்சை	இவ் வினாத்தாளானது சொற்கள், எண்கள் மற்றும் உருவமைப்பில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், கால இடைவெளிகளுக்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடும் வகையில் வடிவமைக்கப்படும்.
03.	பொது அறிவு	இவ் வினாத்தாளானது தேசிய பிராந்திய அத்துடன் உலகளாவிய ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதாரம் அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத்துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வு பற்றியும் அளவிடும் வகையில் வடிவமைக்கப்படும்.

ஆழ்வாப்பிள்ளை மிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்